தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வியாழக்கிழமை, 1979 மார்ச் 29.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) அறிவிப்பு.

மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்ட முன் வடிவுகள் ஆய்வு செய்யப்பெற்று பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பி அனுப்பப்பெற்றுள்ளன என்று மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

(1) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு முன் நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1979).

(2) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1979).

(3) தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1979).

(2) அறிக்கை அளித்தல்.

(அ) பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை.

திரு. இரா. முத்தையா : தலைவரவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின 1973-74 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கையில் வீராணம் முதலிய குடிநீர் வழங்கும் திட்டங்கள் குறித்த பத்திகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையை (ஆறாவது அறிக்கை) அவைமுன் வைக்கிறேன்.